கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் செப்டம்பர் மாதம் 09ம் தேதி செவ்வாய்க்கிழமை
இடைநிலை மனு எண்.4/2020
இன்
அசல் வழக்கு எண்.197/2020

1) ராமர்
2) பிரேமா
3) சரவணக்குமார்
4) பெருமாள் ... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/எதிர்/

1) திருமதி.மீனாட்சி
2) செந்தில்குமார் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இறுதியாக இம்மனு 25.08.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.G.அடைக்கலம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.தங்கமணி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது வாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கை நிராகரிக்க வேண்டும் என்று கூறி மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் கட்டளை 7 விதி 11 மற்றும் பிரிவு 151 cpc ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு சங்கதிகளை ஆட்சேபணை செய்தும், மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.16 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.20 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும் உள்ளன.

**3. தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

மனுதாரர்களின் மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது.

3.1) அசல் வழக்கானது 16.10.2020ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு, பல்வேறு இடைநிலை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, இவ்வழக்கானது 25.08.2025 வரை நிலுவையில் இருந்து வருகிறது. அசல் வழக்கானது மேற்படி நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், விளம்புகை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2) வாதி, அசல் வழக்கை கடந்த 16.10.2020ல் தாக்கல் செய்துள்ளதாகவும், ஆனால், அசல் வழக்கின் 1வது இலக்க சொத்தை கடந்த 29.08.2020ல் எதிர்மனுதாரர்களுக்கு தான ஆவணம் மூலம் 1ம் வாதியின் மகள்களான விஜயா, பானு, லெட்சுமி ஆகியோர்களுக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளனர் என்றும், எனவே, வழக்கு சொத்தை பொறுத்து வழக்கிடும் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு உரிமை இல்லை என்றும், அதன்படியே அசல் வழக்கு தாக்கல் செய்ய வழக்கு மூலம் எதுவும் இல்லை என்றும், எனவே அசல் வழக்கு நிராகரிக்கப்பட வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கூறப்பட்டுள்ளது.

3.3)எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள எதிர் உரையில் மேற்படி 1வது இலக்க சொத்தை பொறுத்து எதிர்மனுதாரர்கள்/வாதிகள் கடந்த 29.08.2020ல் தங்களது மகள்களுக்கு எழுதி வைத்துள்ளதை அவர்களது வழக்கறிஞரிடம் வயோதிகம் காரணமாக கூறாமல் இருந்துவிட்டதாகவும்,

அது வேண்டும் என்றே ஏற்பட்டதல்ல என்றும், மேற்படி 1வது இலக்க சொத்தை பொறுத்து பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லாமல், வாதிகளின் அனுபவத்தை இடைஞ்சல் செய்து வருவதாக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3.4) அசல் வழக்கு பரிகாரத்தில் 1வது பரிகாரமாக வழக்கு சொத்தை பொறுத்து வாதிகளின் அனுபவத்திற்கு பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க வேண்டியும், 2வது இலக்க சொத்தை பொறுத்து 05.08.2020 ல் ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லாது என்ற விளம்புகை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இம்மனு நிலுவையில் இருந்த நிலையில், எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் கடந்த 23.03.2021ல் கட்டளை 1 விதி 10ன் கீழ் மேற்படி 29.08.2020ல் 1வது இலக்க சொத்துக்களை தானமாக எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் எழுதிக்கொடுக்கப்பட்டு விஜயா, பானு, லெட்சுமி ஆகியோர்களை 3 முதல் 5 வாதிகளாக அசல் வழக்கில் சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனு இருதரப்பு விசாரணைக்கு பின்னிட்டு 09.09.2025ல் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3.5) அசல் வழக்கு 1வது இலக்க சொத்தானது இந்நிர் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு பாத்தியப்பட்டு, அவர்களது மகள்களுக்கு தானமாக கொடுத்த நிலையில், வழக்கு சொத்தில் அவர்களது அனுபவத்தை பொறுத்து பரிகாரம் எதுவும் கேட்க முடியாது என்று சட்டப்படி கூற இயலாது. அசல் 1வது இலக்க சொத்தை பொறுத்து வாதிகளால் விளம்புகை பரிகாரம் கோராமல், உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய நிலையில், மேற்படி உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு சட்டப்படி உரிமை உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தும், மேற்படி 1வது இலக்க சொத்தை தானமாக பெற்ற விஜயா, பானு, லெட்சுமி ஆகியோர்கள் இ.ம.எண்.5/21 மூலம் அசல் வழக்கில் ஒரு தரப்பினர்களாக சேர்க்க இந்நீதிமன்றம் அனுமதித்துள்ள நிலையிலும், இவ்வழக்கு கட்டளை 7 விதி 11ன் கீழ் சட்டப்படியாக நிராகரிக்க வேண்டிய வழக்கல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

3.6) மேற்படி வழக்கு தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனை இருதரப்பு சாட்சி, சான்றாவணங்களுக்கு பின்னரே முழுமையாக விசாரணை மேற்கொண்டு தீர்வு காண இயலும் என்ற நிலையிலும், இம்மனு நிராகரிக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனு தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.09 15:49:57 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

<u>**இணைப்பு:**</u>

1) <u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்**</u>– இல்லை

2) <u>**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**</u>

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 25.06.1973ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் |
| ம.சா.ஆ.2 | 09.01.1984ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் |
| ம.சா.ஆ.3 | 26.05.1986 ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் |
| ம.சா.ஆ.4 | 03.09.2001ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | அழகர்சாமி பெயரிலுள்ள வீட்டுவரி ரசீதுகள்(2 எண்ணம்) |
| ம.சா.ஆ.6 | ராமர் பெயரிலுள்ள வீட்டு வரி ரசீதுகள் (3 எண்ணம்) |

| | |
|---|---|
| ம.சா.ஆ.7 | அழகர் சாமி பெயரிலுள்ள மின்கட்டண ரசீதுகள் (4 எண்ணம்) |
| ம.சா.ஆ.8 | சர்வே எண்.64 க்கான புல வரைபடம் |
| ம.சா.ஆ.9 | 05.08.2020 ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம். |
| ம.சா.ஆ.10 | பட்டா எண் 1468க்கான 10(1) சிட்டா கணினி நகல் |
| ம.சா.ஆ.11 | 29.08.2020ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.12 | சர்வே எண்.64/11க்கான வில்லங்க சான்றிதழ் கணினி நகல் |
| ம.சா.ஆ.13 | சர்வே எண் 64/11Bக்கான கட்டிட வரைபடம் |
| ம.சா.ஆ.14 | சரவணக்குமார் பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது(2 எண்ணம்) |
| ம.சா.ஆ.15 | சரவணக்குமார் பெயரிலுள்ள மின்கட்டண ரசீது(3 எண்ணம்) |
| ம.சா.ஆ.16 | 64/11A, 11Bக்கான அ பதிவேடு |

3) **<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**– இல்லை

4) **<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 25.06.1973ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 03.09.2001ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |

எ.ம.சா.ஆ.3 பட்டா எண்.796க்கான 10(1) சிட்டா கணினி நகல்

எ.ம.சா.ஆ.4 09.01.1984க்கான கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்

எ.ம.சா.ஆ.5 பட்டா எண்.1097க்கான 10(1)சிட்டா கணினி நகல்

எ.ம.சா.ஆ.6 26.05.1986க்கான கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்

எ.ம.சா.ஆ.7 03.09.2001ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்

எ.ம.சா.ஆ.8 05.08.2020 தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல்

எ.ம.சா.ஆ.9 22.09.2015ம் தேதியிட்ட மீனாட்சி பெயரிலுள்ள மின்கட்டண ரசீது

எ.ம.சா.ஆ.10 17.11.2015ம் தேதியிட்ட மீனாட்சி பெயரிலுள்ள மின்கட்டண ரசீது

எ.ம.சா.ஆ.11 29.01.2019ம் தேதியிட்ட மீனாட்சி பெயரிலுள்ள மின்கட்டண ரசீது

எ.ம.சா.ஆ.12 18.05.2020ம் தேதியிட்ட மீனாட்சி பெயரிலுள்ள மின்கட்டண ரசீது

எ.ம.சா.ஆ.13 15.09.2020ம் தேதியிட்ட மீனாட்சி பெயரிலுள்ள மின்கட்டண ரசீது

எ.ம.சா.ஆ.14 18.03.2021ம் தேதியிட்ட மீனாட்சி பெயரிலுள்ள மின்கட்டண ரசீது

எ.ம.சா.ஆ.15 16.11.2021ம் தேதியிட்ட மீனாட்சி பெயரிலுள்ள மின்கட்டண ரசீது

எ.ம.சா.ஆ.16 12.03.2016ம் தேதியிட்ட மீனாட்சி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.17 | 14.03.2018ம் தேதியிட்ட மீனாட்சி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது |
| எ.ம.சா.ஆ.18 | 16.02.2020ம் தேதியிட்ட மீனாட்சி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது |
| எ.ம.சா.ஆ.19 | 15.12.2021ம் தேதியிட்ட மீனாட்சி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது |
| எ.ம.சா.ஆ.20 | 12.05.2016ம் தேதியிட்ட மீனாட்சி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது |

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.09 15:50:08 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.4/2020
அசல் வழக்கு எண்.197/2020
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 09.09.2025